3

# கீழ்ப்படிதல்: தேவனுடைய அளவிகள்

*இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் நான் சாட்சியாக எச்சரிக்கிறதாவது: ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால், இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளை தேவன் அவன்மேல் கூட்டுவார். ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புஸ்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப்போட்டால், ஜீவபுஸ்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்தி லிருந்தும், இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும், அவனுடைய பங்கை தேவன் எடுத்துப்போடுவார் (வெளிப்படுத்தின விசேஷம் 22:18, 19).*

நமது கண்களில் சிறிய விஷயமாகக் காணப்படுவது தேவனுக்கு முதன்மை யான முக்கியத்துவம் உடையதாக இருக்கலாம். தேவனுக்குக் கீழ்ப்படிவதில் நமது அணுகுமுறை எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை ஜான் ஜெரார்டு என்பவர் சுருக்கமாகப் பின்வருமாறு வெளிப்படுத்தினார்:

> உபதேசத்தின் ஒவ்வொறு கூறுக்கும், சபையின் அரசாங்கம் மற்றும் ஆராதனைக்கும், தெய்வீக அனுமதி ஒன்று அவசியமானதாக உள்ளது; அதாவது, இந்த வட்டாரங்களில், வெளிப்படையாகக் குறிப்பிடப் படாத அல்லது நல்ல மற்றும் வேதவசனங்களின் உரைகளில் இருந்து நல்ல மற்றும் அவசியமான விளைவை ஏற்படுத்தாதவைகளாக உள்ளவையான, வேதவசனங்களினால் கட்டளையிடப்படாத எதுவும் தடைசெய்யப் பட்டுள்ளது.[1]

## அதிகாரத்துவத்தின் கொள்கைகள்

ஒரு நடைமுறையானது தெய்வீக அங்கீகாரத்தைக் கொண்டுள்ளதா இல்லையா என்பதைத் தீர்மானிப்பதற்கு, அதிகாரத்துவத்தின் நான்கு கொள்கைகள் புரிந்துகொள்ளப்பட வேண்டும்:

(1) ஒரு நடைமுறையைக் குறித்துத் தேவன் ஒரு நேர்மறையான கட்டளை அல்லது உரையைக் கொடுத்திருந்தால், நாம் அதற்குக் கீழ்ப்படிந்தாக வேண்டும். அப்போஸ்தலர்கள் யாருக்கு ஞானஸ்நானம் கொடுத்தார்களோ, அவர்களுக்கு, இயேசு, "நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி" உபதேசம்பண்ண வேண்டும் என்று இயேசு கூறியபோது, அவர் இந்தக் கொள்கையை வெளிப்படையாக எடுத்துரைத்தார் (மத்தேயு 28:20அ).

(2) தேவன் ஒரு நடைமுறையைத் தடைசெய்திருக்கிறார் என்றால், அதை நாம் தவிர்க்க வேண்டும். தடைசெய்யப்பட்டவைகள், மலைப்பிரசங்கத்தில்

காணப்படுகின்றன. இயேசு, ‘‘நீங்கள் ஜெபம்பண்ணும்போது, அஞ்ஞானிகளைப்போல வீண்வார்த்தைகளை அலப்பாதேயுங்கள்’’ என்று கூறினார் (மத்தேயு 6:7அ); மேலும் அவர், “நீங்கள் உபவாசிக்கும்போது, மாயக்காரரைப்போல முகவாடலாய் இராதேயுங்கள்’’ என்றும் கூறினார் (6:16அ).

(3) ஒரு குறிப்பிட்ட வட்டாரத்திற்குள் நடைமுறைப் படுத்தப்பட வேண்டியது என்ன என்பது பற்றித் தேவன் ஒரு தேர்ந்து கொள்ளுதலை ஏற்படுத்தியிருக்கிறார் என்றால், அந்த தேர்ந்துகொள்ளுதலுடன் நாம் மட்டுப்படுத்திக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். இந்தக் கொள்கை உண்மையானதல்ல என்றால், தேவனுடைய தேர்ந்து கொள்ளுதல் நம்முடைய சொந்தத் தேர்ந்துகொள்ளுதலுக்கு முன்னானவைகளாக இருக்க மாட்டாது. தேவன், இஸ்ரவேலின் பன்னிரெண்டு கோத்திரங்களில் இருந்து லேவி கோத்திரத்தை, இஸ்ரவேலின் மதரீதியான ஆராதனைகளுக்குப் பொறுப்பாயிருக்கும்படி தேர்த்துகொண்டார் (எண்ணாகமம் 1:50). இது, மற்ற எந்த கோத்திரத்தில் இருந்தும் எவரொருவரும் பரிசுத்த ஸ்தலத்தில் ஆராதனை விஷயங்களில் முன்னின்று நடத்தக் கூடாது என்று அர்த்தப்பட்டது.

நியாயப்பிரமாணத்தில் தேவன் தமது தேர்ந்துகொள்ளுதலை வெளிப்படுத்தி யிருந்ததால், நியாயப்பிரமாணம் அமுலில் இருக்கும் வரையில் இயேசு ஒரு ஆசாரியராக இருக்க முடியாதிருந்தது. (யூதா கோத்திரத்தில் இருந்து தோன்றிய) இயேசுவை, நியாயப்பிரமாணத்திற்கு நேரெதிராக ஒரு ஆசாரியராக ஊழியம் செய்யும்படி நியமித்தபடியால், தேவன் தமது சொந்தத் தேர்ந்து கொள்ளுதலை மீறியிருக்கவில்லை.

இயேசு ஒரு ஆசாரியராயிருக்கும்படி தேவன் செய்த விஷயத்தை விளக்குகையில், எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் பின்வருமாறு எழுதினார்:

> ஆசாரியத்துவம் மாற்றப்பட்டிருக்குமேயானால், நியாயப்பிரமாணமும் மாற்றப்பட வேண்டியதாகும். இவைகள் எவரைக்குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறதோ, அவர் வேறொரு கோத்திரத்துக்குள்ளானவராயிருக்கிறாரே; அந்தக் கோத்திரத்தில் ஒருவனாகிலும் பலிபீடத்து ஊழியம் செய்ததில்லையே. நம்முடைய கர்த்தர் யூதாகோத்திரத்தில் தோன்றினாரென்பது பிரசித்தமாயிருக்கிறது; அந்தக் கோத்திரத்தாரைக்குறித்து மோசே ஆசாரியத்துவத்தைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லையே (எபிரெயர் 7:12-14).

தேவனுடைய தேர்ந்துகொள்ளுதல் என்பது அவர் குறிப்பிட்டவற்றை *மாத்திரம்* உள்ளடக்கி இருக்கிறது. அவரது அமைதியானது, அவர் தேர்ந்துகொண்டுள்ளவை *மாத்திரம்* கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று அர்த்தப்படுகிறது. தேவன் ஒரு தேர்ந்துகொள்ளுதலை ஏற்படுத்தியிருக்கிறார் என்றால், அந்த வட்டாரத்திற்குள் வேறு எதுவும் நடைமுறைப்படுத்தப் படக்கூடாது.

(4) தேவன் ஒரு குறிப்பிட்ட தேர்ந்துகொள்ளுதலை ஏற்படுத்தி இராதி ருந்தால், நாம் நமது சொந்தப் பகுத்தறிவின்படி செயல்படச் சுயாதீனம்

*கொண்டிருக்கிறோம். உணவுகளை உண்ணுதல் மற்றும் நாட்களை அநுசரித்தல் பற்றிப் பவுல் எழுதும்போது இதை விவரித்தார் (ரோமர் 14:2-6). கிறிஸ்தவர்களுக்கான உணவுகளைப் பற்றித் தேவன் தேர்ந்துகொள்ளுதல் எதையும் ஏற்படுத்தவில்லை, எனவே இப்படிப்பட்ட விஷயங்களில் தேர்ந்துகொள்வதற்கு நாம் சுயாதீனம் கொண்டிருக்கிறோம்.*

*இந்தக் கொள்கைகள் கர்த்தருடைய இராப்போஜனம் அல்லது வேறு எந்த நடைமுறைக்கும் செயல்படுத்தப்பட முடியும். ஒரு உதாரணமாக நாம் கர்த்தருடைய பந்தியைப் பற்றி ஆழ்ந்து சிந்திப்போம்:*

*(1) கர்த்தருடைய பந்தியைப் புசித்தல் கட்டளையிடப்பட்டுள்ளது (1 கொரிந்தியர் 11:23-26), எனவே இது ஆசரிக்கப்பட வேண்டும்.*

*(2) விக்கிரகங்களுக்குப் படைக்கப் பட்டவற்றைப் புசித்தல் தடை செய்யப்பட்டுள்ளது (1 கொரிந்தியர் 10:19-21) மற்றும் இது செயல்படுத்தப் படக்கூடாது. கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய பாத்திரத்திலும் பேய்களுடைய பாத்திரத்திலும் பானம்பண்ணக்கூடாது.*

*(3) இயேசு அப்பத்தையும் திராட்ச ரசத்தையும் தேர்ந்துகொண்டார் (மத்தேயு 26:26-29). இத்துடன் வேறு எந்த உணவும் அல்லது பானமும் பெயர்குறிப்பிடப்படவில்லை, எனவே நாம் அப்பத்தின்மீது பாலாடைக் கட்டியையோ அல்லது இறைச்சியையோ வைக்கக் கூடாது.*

*(4) பாத்திரத்தின் வகை பற்றித் தேர்ந்துகொள்ளுதல் எதுவும் ஏற்படுத்தப்படவில்லை, அதாவது பாத்திரம் எந்தப் பொருளினால் செய்யப்பட வேண்டும் அல்லது அதனுள் இருக்கும் திராட்சரசம், பங்கேற்பவர்களுக்குள் எவ்வாறு பிரித்து அளிக்கப்பட வேண்டும் என்பது பற்றிய தேர்ந்துகொள்ளுதல் எதுவும் இல்லை. இந்தப் பகுதிகளில் கிறிஸ்தவர்கள் தேர்ந்து கொள்வதற்கான உரிமை கொண்டுள்ளனர்.*

## அதிகாரத்துவத்தின் ஆதாரமூலம்

***பரலோகமா அல்லது மனிதர்களா?***

*மார்க்கரீதியான நடைமுறைகள் பரலோகத்தில் இருந்தோ அல்லது மனிதர்களிடத்தில் இருந்தோ மட்டுமே வர முடியும் - அதாவது தேவனிடத்தில் இருந்து அல்லது சாத்தானால் செல்வாக்குச் செலுத்தப்பட்ட மனிதர்களிடத்தில் இருந்து (2 கொரிந்தியர் 11:13-15). யூதர்களிடத்தில் இயேசு, "யோவான் கொடுத்த ஸ்நானம் தேவனால் உண்டாயிற்றோ? மனுஷரால் உண்டாயிற்றோ? யாரால் உண்டாயிற்று?" என்று கேட்டார் (மத்தேயு 21:25; மாற்கு 11:30; லூக்கா 20:4). இது ஒரு முக்கியமான கேள்வியாகவும் மார்க்கரீதியான நடைமுறை ஒவ்வொன்றைக் குறித்தும் கேட்கப்பட வேண்டியதாகவும் உள்ளது. இது பரலோகத்தில் இருந்து வந்தது - அதாவது, இது வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது - என்றால், இது தேவனிடத்தில் இருந்து வந்துள்ளது. தேவன் ஏற்கனவே தேர்ந்துகொள்ளுதலை ஏற்படுத்தியுள்ள ஒரு பகுதியில், மனிதர்களால் ஒரு தேர்ந்துகொள்ளுதல் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால், அது தேவனால் அங்கீகரிக்கப்பட்டு இருப்பதில்லை.*

*தேவன் தமது கட்டளைகளை, இஸ்ரவேல் மக்கள் தங்கள் வஸ்திரங்களின் மூலைத் தொங்கல்களில் எழுதும்படி அவர்களுக்கு அறிவுறுத்தினார். பின்பு*

அதற்கான நோக்கத்தை அவர் விளக்கியுரைத்தார்:

> நீங்கள் பின்பற்றிச் சோரம்போகிற உங்கள் இருதயத்துக்கும் உங்கள் கண்களுக்கும் ஏற்க நடவாமல், அதைப் பார்த்து, கர்த்தரின் கற்பனைகளையெல்லாம் நினைத்து அவைகளின்படியே செய்யும்படிக்கு, அது உங்களுக்குத் தொங்கலாய் இருக்கவேண்டும். நீங்கள் என் கற்பனைகளையெல்லாம் நினைத்து, அவைகளின்படியே செய்து, உங்கள் தேவனுக்குப் பரிசுத்தராயிருக்கும்படி அதைப் பார்ப்பீர்களாக (எண்ணாகமம் 15:39, 40).

இந்தப் போதனையானது, நேர்மறையாகவும் எதிர்மறையாகவும் உரைக்கப்பட்டுள்ளது: இஸ்ரவேல் மக்கள் கர்த்தருடைய கட்டளைகளின்படியெல்லாம் செய்ய *வேண்டியிருந்தனர்,* மற்றும் அவர்கள் தங்கள் சொந்த இருதயங்களும் கண்களும் செய்யும்படி சாய்கிற விஷயங்களைச் *செய்யக் கூடாதவர்களாக இருந்தனர்.*

ஒரு போதனை அல்லது நடைமுறை என்பது உலகக் கண்ணோட்டத்தில் சரியானதாகக் காணப்பட்டாலும் அது மரணத்திற்கு வழிநடத்துவதாக இருக்கக்கூடும் (நீதிமொழிகள் 14:12). தேவனுடைய வார்த்தையின்படி பேசாதவர்கள் தங்களுக்குள் வெளிச்சத்தைக் கொண்டிருப்பதில்லை (காண்க ஏசாயா 8:20). உங்கள் வழிகள் என் வழிகளும் அல்ல (ஏசாயா 55:8, 9), மற்றும் மனிதனுடைய வழியானது அவனுக்குள் இருப்பதில்லை (எரேமியா 10:23). இருதயம் என்பது திருக்குள்ளதாக இருக்கிறது (எரேமியா 17:9); ஆகையால், தனது சொந்த இருதயத்தின் மீது நம்பிக்கை வைக்கும் ஒரு நபர் மூடராக இருக்கிறார் (நீதிமொழிகள் 28:26).

நியாயாதிபதிகளின் காலத்தில் ஒவ்வொருவரும் தம்தம் பார்வைக்குச் சரிப்போனபடி செய்து வந்தார் என்பது இஸ்ரவேலின் பாவமாக இருந்தது (நியாயாதிபதிகள் 17:6; 21:25). தேவனுடைய வழிகளை விட்டுப் பிரிந்தவர்களைப் பற்றிப் பேதுரு, "செம்மையான வழியை" விட்டவர்கள் என்று குறிப்பிட்டார் (2 பேதுரு 2:15). கர்த்தர் தமது கண்களில் சரியானதைச் செய்யும்படியே ஒவ்வொருவரிடத்திலும் எதிர்பார்க்கிறார் (உபாகமம் 13:18).

இஸ்ரவேல் மக்கள் தங்களைச் சுற்றிலும் இருந்த மக்களினத்தின் நடைமுறைக்கு மாறாகத் தேவனுடைய போதனையையே பின்பற்ற வேண்டும் என்று தேவன் புத்திகூறினார்.

> "நீங்கள் குடியிருந்த எகிப்துதேசத்தாருடைய செய்கையின்படி செய்யாமலும், நான் உங்களை அழைத்துப்போகிற கானான் தேசத்தாருடைய செய்கையின்படி செய்யாமலும், அவர்களுடைய முறைமைகளின்படி நடவாமலும், என்னுடைய நியாயங்களின்படி செய்து, என்னுடைய கட்டளைகளைக் கைக்கொண்டு நடவுங்கள்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்" (லேவியராகமம் 18:3, 4).

> "நான் உங்களுக்கு முன்பாகத் துரத்திவிடுகிற ஜனத்தினுடைய வழிபாடுகளில் நடவாதிருங்கள்; அவர்கள் இப்படிப்பட்ட காரியங்களையெல்லாம்

*செய்தபடியால் நான் அவர்களை அரோசித்தேன்" (லேவியராகமம் 20:23).*

***தேவனா அல்லது பிசாசா?***

*யூதர்களைப் பற்றி இயேசு பின்வருமாறு கூறினார்,*

> *நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்; உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள்; அவன் ஆதிமுதற் கொண்டு மனுஷகொலைபாதகனாயிருக்கிறான்; சத்தியம் அவனிடத்திலில்லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலைநிற்கவில்லை; அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய்பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான் (யோவான் 8:44).*

*பிசாசானவன் ஏவாளை வஞ்சித்தான் (ஆதியாகமம் 3:1-4; 2 கொரிந்தியர் 11:3; 1 தீமோத்தேயு 2:14), மற்றும் பவுலின் போதனையைப் புரட்டிப்போடும்படி எலிமா என்பவன் பிசாசினால் தூண்டப்பட்டான் (நடபடிகள் 13:8-10). அசுத்த ஆவிகளின் செல்வாக்கினால் சத்தியத்தில் இருந்து விலகிப்போகுதல் வருகிறது (1 தீமோத்தேயு 4:1, 2).*

## *அதிகாரத்துவத்தின் உதாரணங்கள்*

*இயேசு தமது ஊழியத்தின்போது, மக்களுக்குப் பல்வேறு அறிவுறுத்துதல் களைக் கொடுத்தார். ஒவ்வொரு கட்டளையும் கீழ்ப்படிதலைக் கேட்டுக்கொண்டது:*

- *"... நீ எழுந்து, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு, உன் வீட்டுக்குப் போ" (மத்தேயு 9:6ஆ).*
- *"... நீ கடலுக்குப் போய், தூண்டில்போட்டு, முதலாவது அகப்படுகிற மீனைப் பிடித்து, அதின் வாயைத் திறந்துபார்; ஒரு வெள்ளிப்பணத்தைக் காண்பாய்; அதை எடுத்து எனக்காகவும் உனக்காகவும் அவர்களிடத்தில் கொடு" (மத்தேயு 17:27).*
- *"உங்களுக்கு எதிரே இருக்கிற கிராமத்துக்குப் போங்கள்; போனவுடனே, அங்கே ஒரு கழுதையையும் அதனோடே ஒரு குட்டியையும் கட்டியிருக்கக் காண்பீர்கள்; அவைகளை அவிழ்த்து என்னிடத்தில் கொண்டுவாருங்கள்" (மத்தேயு 21:2).*
- *"ஆழத்திலே தள்ளிக்கொண்டுபோய், மீன்பிடிக்கும்படி உங்கள் வலைகளைப் போடுங்கள்" (லூக்கா 5:4ஆ).*
- *"நீ இதை ஒருவருக்கும் சொல்லாமல், போய், உன்னை ஆசாரியனுக்குக் காண்பித்து, ... பலிசெலுத்து" (லூக்கா 5:14).*

*இந்த நிகழ்வுகள் ஒவ்வொன்றிலும், இயேசுவிடத்தில் இருந்து ஆசீர்வாதம் அல்லது வாக்குத்தத்தம் பெறுவதற்கு, அந்தந்த நபர்கள், அவர் உரைத்தபடியே மிகச்சரியாகச் செய்ய வேண்டி இருந்தது. அவர்கள் வேறுவிதமாகச் செய்தி ருந்தால், அவர்கள் அவருக்குக் கீழ்ப்படிந்தவர்களாக இருந்திருக்க மாட்டார்கள்.*

*மத்தேயு 28:20*

இயேசு இந்த பூமியை விட்டுச் செல்வதற்கு முன்னர், அவருடைய சீஷர்கள் ஞானஸ்நானம் கொடுக்கும் மக்கள் யாவருக்கும், "நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு" உபதேசம் செய்யும்படி கூறினார் (மத்தேயு 28:19, 20அ). இதை அவர்கள், சபையின் தொடக்க நாட்களில் வெற்றிகரமாகச் செய்தனர், ஏனெனில் ஞானஸ்நானம் பெற்ற விசுவாசிகள், "அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், ... உறுதியாய்த் தரித்திருந்தார்கள்" (நடபடிகள் 2:42அ).

இயேசு, "நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள்" என்று கூறியபோது அவர், ஞானஸ்நானம் பெற்றவர்கள் பின்வரும் விஷயங்களில் போதிக்கப்பட வேண்டும் என்று அர்த்தப்படுத்தினார்:

- இயேசு கட்டளையிட்டவற்றில் எதையும் விட்டுவிடாமல் *எல்லாவற்றையும்* செய்ய.
- அவர் கட்டளையிட்டவற்றிற்கு அதிகமாகவோ அல்லது அதில் ஒன்றும் குறைவாகவோ *செய்யாதிருக்க.*
- அவர் கட்டளையிட்டவற்றில் எவ்விதமாற்றமும் இன்றி *எல்லாவற்றையும்* செய்ய.
- அவர் கட்டளையிட்டபடி *மிகச்சரியாகச்* செய்ய.

*மத்தேயு 15:7-9; மாற்கு 7:7-13*

மத்தேயு 15:7-9ல் இயேசு, மனிதர்களின் பாரம்பரியங்களையும் கட்டளைகளையும் பின்பற்றுவதைக் கண்டனம் செய்தார். அவர் தமது பின்பற்றாளர்களுக்கு அளவிகளை அமைத்தார், இது நாம் நமது நடைமுறைகளை அவரது கட்டளைகளுடன் மட்டுப்படுத்த வேண்டும் என்று அர்த்தப்படுகிறது. அவரது சத்தியத்திற்குப் புறம்பே - மனிதர்களின் போதனையில் காணப்படுகிற போதித்தலின் அடிப்படையிலான ஆராதனை பயனற்றதும் மதிப்பற்றதுமாக உள்ளது, இது நடைமுறைப்படுத்தப்படத் தகுதியற்றதாக உள்ளது.

இயேசு, "மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்" (மாற்கு 7:7) என்று கூறியபோது, அவர் யூதர்களுக்கு, ஏசாயா 29:13ன் கருத்தை நடைமுறைப்படுத்தினார். இஸ்ரவேல் மக்களை, தேவனை விட்டுத் திருப்பியிருந்த அவர்களின் ஆவிக்குரிய பார்வை அற்ற தன்மையை ஏசாயா குறிப்பிட்டிருந்தார். அவர்கள் தேவனுடைய வெளிப்பாட்டை, வாசிக்கக் கூடியவர்களுக்கு முத்திரையிட்ட ஒரு புத்தகமாகவும், கல்வியறிவு அற்றவர்களுக்கு வாசிக்க இயலாததாகவும் கண்ணோக்கினர் (ஏசாயா 29:11, 12). அவர்கள் தேவனுடைய வசனத்தின் அறிவு இல்லாதவர்களாகவும் தங்கள் சொந்த சட்டங்கள் மற்றும் முறைமை களின்படி தேவனை சேவிக்க நாடுபவர்களாகவும் இருந்தனர். இவ்வகையான இயல்புடைய ஆராதனையை வீணானது என்று இயேசு உரைத்தார்.

யூதர்களிடத்தில் இயேசு, "நீங்கள் தேவனுடைய கட்டளையைத் தள்ளிவிட்டு, மனுஷருடைய பாரம்பரியத்தைக் கைக்கொண்டுவருகிறவர்களாய்" மற்றும் "நீங்கள் உங்கள் பாரம்பரியத்தைக் கைக்கொள்ளம்படிக்குத் தேவனு

டைய கட்டளைகளை வியர்த்தமாக்கினது" என்று கூறினார் (மாற்கு 7:8, 9ஆ). மேலும் அவர், "நீங்கள் போதித்த உங்கள் பாரம்பரியத்தினால் தேவவசனத்தை அவமாக்குகிறீர்கள்" என்றும் கூறினார் (மாற்கு 7:13அ).

*யோவான் 4:20-24*

இயேசு ஒரு தீர்க்கதரிசி என்று யூகித்து அறிந்த நிலையில், யாக்கோபின் கிணற்றருகே அவரிடத்தில் சமாரியப்பெண், ஆராதனையைப் பற்றிய ஒரு கேள்வியைக் கேட்டாள். அந்தக் கேள்வி தேவன் இருக்கிறாரா என்பது பற்றியதாகவோ, ஆராதிக்க வேண்டிய சரியான தேவன் பற்றியதாகவோ, ஆராதனை அவசியமா அல்லது அவசியமில்லையா என்பது பற்றியதாகவோ, ஆராதனையில் பயன்படுத்தப் படவேண்டியது என்ன என்பது பற்றியதாகவோ அல்லது ஆராதனையானது நியாயப்பிரமாணத்தின்படி இருக்க வேண்டுமா இல்லையா என்பது பற்றியதாகவோ இருக்கவில்லை. அவள் தேவன்மீது விசுவாசம் கொண்டிருந்தாள் மற்றும் தான் அவரை ஆராதிக்க வேண்டும் என்று நம்பி இருந்தாள். அவள் சரியான ஆராதனை மீது ஆர்வம் கொண்டிருந்தாள் மற்றும் ஆராதனையானது தேவனுடைய சித்தத்தின்படியானதாக இருக்க வேண்டும் என்பதை உணர்ந்து அறிந்திருந்தாள். அவள், ஆராதனை பற்றிய உபதேசங்களுக்குப் பழக்கமானவளாக இருந்தாள் மற்றும் அந்தக் காலகட்டத்தில் நியாயப்பிரமாணமே ஆராதனைக்குத் தர அளவையாக இருந்தது என்று ஏற்றுக்கொண்டிருந்தாள். ஆராதனைக்குச் செல்ல வேண்டிய சரியான இடம் எது என்பது பற்றி அறிய அவள் விரும்பினாள்.

இயேசுவின் பதிலானது, ஆராதனையில் எல்லா முயற்சிகளும் தேவனுக்குப் பிரியமானவையாக இருப்பதில்லை என்பதை வெளிப்படுத்திற்று. சமாரியர்கள் ஆராதனை செய்தாலும், அவர்களின் முயற்சிகள் தேவனைப் பிரியப்படுத்துகிறதாக இருந்திருக்கவில்லை. தகவல் அறிவற்ற ஆராதனை பிரியமற்ற ஆராதனையாக உள்ளது. தேவனை ஆராதித்தல் குறித்து சமாரியர்கள் அறியாமை உள்ளவர்களாக இருந்ததாக இயேசு அந்தப் பெண்ணிடம் கூறினார்.

யூதர்களால் பின்பற்றப்பட்டதே சரியான தர அளவையாக இருந்தது. அந்தப் பெண்ணிடத்தில் இயேசு, மேசியாவின் மூலம் வரவிருந்த இரட்சிப்பு யூதர்களிடத்தில் இருந்து வரவிருந்ததாகக் கூறினார். அவர்களுக்கு [யூதர்களுக்கு] பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் மூலமாகத் தேவனுடைய வெளிப்பாடு அருளப்பட்டிருந்தது. தேவன் வேதவசனங்களை யூதர்களிடத்தில் ஒப்புவித்திருந்தார் (ரோமர் 3:2).

சரியான அல்லது தவறான ஆராதனை என்பது இரட்சிப்பின்மீது பெரும்விளைவை ஏற்படுத்துகிறது. இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என்றோ அல்லது பாவங்களுக்கு மன்னிப்பை எவ்வாறு பெறுவது என்றோ இயேசு கலந்துரையாடவில்லை, ஆனால் தேவனுக்குப் பிரியமான ஆராதனையைப் பற்றி அவர் பேசிக்கொண்டிருந்தார். அந்த வேளையில் இது, தேவன் இஸ்ரவேல் மக்களுக்கு வெளிப்படுத்தி இருந்தவற்றின்படி தேவனை ஆராதித்தலை உள்ளடக்கி இருந்தது.

சரியான ஆராதனையை மாத்திரமே தேவன் ஏற்றுக்கொள்கிறார். கிறிஸ்தவ யுகத்தில் உண்மையான ஆராதனை, ஆவியோடும் உண்மையோடும்

ஏற்றெடுக்கப்பட வேண்டும் (யோவான் 4:23, 24). "ஆவியோடு" என்பது, உள்ளான நபரில் இருந்து ஆராதனை தொடங்க வேண்டும் என்று அர்த்தப்படுத்துகிறது. புறம்பான செயல்கள் போதுமானவை அல்ல. மனித ஆவி இல்லாத ஆராதனை வெறுமையானதாகவும், வெள்ளை மற்றும் மஞ்சள் கருவற்ற முட்டை ஓட்டைப் போலவும் உள்ளது. இது, ஒரு கணவன் தனது மனைவியை அன்புகூருவதாகக் கூறுகையில் அவனது சிந்தை இன்னொரு உலகத்தின்மீதோ அல்லது இன்னொரு பெண்ணின்மீதோ இருப்பதைப் போன்று வெறுமையானதாக உள்ளது. "உண்மையோடு" என்பது நியாயப்பிரமாணத்தின்படியல்ல ஆனால் இயேசுவின் போதனையின்படியானதாக இருக்க வேண்டும் என்று அர்த்தப்படுகிறது. நியாயப்பிரமாணம் (நிழலானது; எபிரெயர் 10:1) மோசேயின் மூலமாக வந்தது. இயேசு சத்தியத்தைக் கொண்டுவந்தார் (யோவான் 1:17), ஏனெனில் அவரே முழு சத்தியமாக இருக்கிறார் (யோவான் 1:14; 14:6; எபேசியர் 4:21). அவரது வசனத்தில் தொடர்ந்து இருப்பவர்கள் சத்தியத்தை அறியமுடியும். சத்தியத்தின் படியான ஒவ்வொருவரும் இயேசுவின் வார்த்தைகளுக்குச் செவிகொடுக்கிறார் (யோவான் 8:31, 32; 17:17; 18:37ஆ).

தேவனுடைய போதனையில், பார்வைக்கு முக்கியத்துவம் இல்லாததாகத் தோன்றும் சிறு விஷயம்கூட முக்கியத்துவம் வாய்ந்தது என்று இயேசு போதித்தார். ''கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருக்கிறான். கொஞ்சத்திலே அநீதியுள்ளவன் அநேகத்திலும் அநீதியுள்ளவனாயிருக்கிறான்" (லூக்கா 16:10).

*யோவான் 16:13, 14*

பரிசுத்த ஆவியானவர் மூலமாக இயேசு, அப்போஸ்தலர்களுக்கும் புதிய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளுக்கும் சகல சத்தியத்தையும் வெளிப்படுத்தினார் (காண்க - எபேசியர் 2:20; 3:3-5). வேறு சத்தியம் எதுவும் வெளிப்படுத்தப்படவில்லை, மற்றும் வேறு சத்தியம் எதுவும் தேவைப்படுவதும் இல்லை. இயேசு பின்வருமாறு வாக்குத்தத்தம் செய்தார்,

> சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார் (யோவான் 16:13, 14).

அப்போஸ்தலர்களே சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்தப்பட வேண்டியவர்களாக இருந்தனர். கடைசி இராப்போஜனத்தை இயேசு ஆசரித்த பஸ்கா பண்டிகை, இந்த உரையின் காட்சியமைவாக இருந்ததால் இது தெளிவாகிறது. இராப்போஜனம் முடிந்தபோது, அவர் அப்போஸ்தலர்களின் பாதங்களைக் கழுவுவதற்காக உணவு மேஜையிலிருந்து எழுந்தார் (யோவான் 13:4, 5); அந்த வேளையில் இந்தப் பன்னிருவர் மாத்திரமே அவருடன் இருந்தனர் என்பது தெளிவு (மத்தேயு 26:20; மாற்கு 14:17; லூக்கா 22:14). அவர்களிடம் இயேசு பின்வருமாறும் கூறினார்: "நான் உங்களுடனே தங்கியிருக்கையில் இவைகளை உங்களுக்குச் சொன்னேன்" (யோவான் 14:25); "நீங்களும் ஆதி

*முதல் என்னுடனேகூட இருந்தபடியால் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" (யோவான் 15:27); "நான் உங்களுடனேகூட இருந்தபடியினால் ஆரம்பத்திலே இவைகளை உங்களுக்குச் சொல்லவில்லை" (யோவான் 16:4ஆ).*

*ரோமர் 10:1-3*

தேவனுக்கு நாம் பதில்செயல் செய்ய வேண்டும் என்றும் அவரது உபதேசத்தைக் கவனநிறைவுடன் பின்பற்ற வேண்டும் என்றும் நம்மிடத்தில் அவர் எதிர்பார்க்கிறார். நாம் நமது சொந்தத்தில் செயல்படும் சுயாதீனத்தை அவர் நமக்கு கொடுப்பதில்லை. நாம் தேவனுடைய சித்தத்தை அறியாமல் செயல்பட்டால், நாம் அறியாமையில் செயல்படுகிறோம். இஸ்ரவேல் மக்கள் இதையே செய்துகொண்டிருந்தனர். *அவர்களின் இரட்சிப்பிற்காகப்* பவுல் செய்த ஜெபமானது, அவர்கள் தங்கள் அறியாமையில் *இழந்துபோகப்பட்டிருந்தனர்* என்று சுட்டிக்காண்பிக்கிறது:

> *தேவனைப்பற்றி அவர்களுக்கு வைராக்கியமுண்டென்று அவர்களைக்குறித்துச் சாட்சி சொல்லுகிறேன்; ஆகிலும் அது அறிவுக்கேற்ற வைராக்கியமல்ல. எப்படியென்றால், அவர்கள் தேவநீதியை அறியாமல், தங்கள் சுயநீதியை நிலைநிறுத்தத் தேடுகிறபடியால் தேவநீதிக்குக் கீழ்ப்படியாதிருக்கிறார்கள் (ரோமர் 10:2, 3).*

தேவன் தமது வெளிப்படுத்துதலில் கட்டளையிட்டுள்ளவற்றை நாம் செய்தலே, நாம் தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறோம் என்று அறிவதற்கான ஒரே வழியாக உள்ளது.

***2 கொரிந்தியர் 11:3***

கொரிந்தியர்கள் கிறிஸ்துவை விட்டுப் புறம்பே வழிநடத்தப் பட்டுவிடுவார்களோ என்று பவுல் அஞ்சினார். கிறிஸ்தவர்கள் நிலைத்திருப்பதற்கு அளவிகள் எதுவும் இல்லையென்றால், எவரொருவரும் புறம்பே வழிநடத்தப்பட முடியாது. 2 கொரிந்தியர் 11:3ல் குறிப்பிடப்பட்டுள்ள "எளிமை" மற்றும் "தூய்மை" ஆகியவை, நமது ஒரே கர்த்தரும் அதிகாரத்துவமுள்ள போதகருமான இயேசுவின்மீது விசுவாசத்துடன் நாம் நிலைத்திருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றன. இவ்விரு வார்த்தைகளும், குற்றமற்ற வகையில் வாழ்வதையும் உண்மையான உபதேசத்திற்கு விசுவாசநிறைவுடன் அர்ப்பணித்தலையும் குறிக்கின்றன. அவர்கள் வேறொரு "இயேசுவை," மாறுபட்ட "ஆவியை" அல்லது வேறொரு "சுவிசேஷத்தை" பின்பற்ற இணங்கிவிடுவார்களோ என்று தாம் கவலைப்பட்டதாக உரைத்ததன் மூலம் பவுல் இதை விரித்துரைத்தார் (2 கொரிந்தியர் 11:4). பிற்பாடு அவர் "கள்ள அப்போஸ்தலர்கள்" மற்றும் "கபடமுள்ள வேலையாட்கள்" பற்றிக் குறிப்பிட்டார் (2 கொரிந்தியர் 11:13). இயேசுவைத் தவிர வேறு எந்த போதகரையும், பரிசுத்த ஆவியானவரைத் தவிர வேறு எந்த ஆவியையும், கொரிந்தியர்கள் பெற்றுக் கொண்டிருந்த சுவிசேஷத்தைத் தவிர வேறு எந்த சுவிசேஷத்தையும் கிறிஸ்தவர்கள் பின்பற்றக் கூடாது.

*கலாத்தியர் 1:7, 8*

இயேசுவின் போதனை மட்டுப்படுத்துவதாக உள்ளது. இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் மாத்திரமே போதிக்கப்பட வேண்டும். சுவிசேஷம் (*euaggelion*, "நற்செய்தி") என்பது, இயேசுவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் பற்றிய தகவலாக உள்ளது; ஆனால் இதைக் காட்டிலும் அதிகமானவற்றை அது உள்ளடக்கியிருக்கிறது. கலாத்தியருக்கு எழுதிய நிருபத்தில் இது, விருத்தசேதனம் கடைப்பிடிக்கப்பட வேண்டுமா இல்லையா என்ற போதனையையும் (கலாத்தியர் 2:2-5), புறஜாதியாருடன் யூதர்கள் இணைவு கொண்டிருப்பதற்கான சுயாதீனத்தின் மீதான போதனையையும் (கலாத்தியர் 2:11-14) உள்ளடக்கி இருக்கிறது. ''சுவிசேஷம்'' என்ற வார்த்தையினால், மறைமுகமாக உணர்த்தப்படும் மற்ற உபதேசங்களையும் வேதவாக்கியங்கள் காண்பிக்கின்றன. இராஜ்யத்தின் சுவிசேஷம் என்பது மனந்திரும்புவதற்கான அவசியத்தை உள்ளடக்குகிறது (மத்தேயு 4:17; மாற்கு 1:15). மனிதர்களின் அந்தரங்கங்கள் நியாயந்தீர்க்கப்படும் என்று சுவிசேஷச் செய்தி நமக்குக் கூறுகிறது (ரோமர் 2:16). கிறிஸ்தவர்களின் வாழ்வானது சுவிசேஷத்தின் கொள்கைகளுக்கு இசைந்திருக்க வேண்டும் (பிலிப்பியர் 1:27). சுவிசேஷம் என்பது, ஒழுக்க ரீதியான பல்வேறு கேட்புகளுடன் (1 தீமோத்தேயு 1:8-11), கிறிஸ்தவ நம்பிக்கையையும் உள்ளடக்கி இருக்கிறது (கொலோசெயர் 1:23). இது அழியாமையை வெளிச்சத்திற்குக் கொண்டு வருகிறது (2 தீமோத்தேயு 1:10). இயேசுவின் கொள்கைகளை விட்டு விலகும் எவரும் தவறில் இருக்கிறார். இரட்சிப்பைக் கொண்டுவருவதில் இயேசுவின் ஊழியம் பற்றி, இரட்சிப்புபெற்றக்கொள்ள அவசியமானவைகளைப்பற்றி அல்லது இரட்சிக்கப்பட்டவர்களால் வாழப்பட வேண்டிய வாழ்வு பற்றி அவர் தவறாகப் போதித்தாலும் அவர் தவறில் இருக்கிறார். சுவிசேஷத்தின் போதனைகளைப் புரட்டும் எவரும் பரலோகத்தின் சாபத்தின் கீழ் இருக்கிறார் (கலாத்தியர் 1:8, 9).

*கொலோசெயர் 2:18-23*

தவறாக வழிநடத்தும் போதகர்கள் நம்மை, சபையின் தலைவரான இயேசுவை (வசனங்கள் 18, 19) பற்றிக்கொள்வதற்குப் பதிலாக, மேட்டிமையான புத்திக்கூர்மையுள்ள நடைமுறைகளைக் கடைபிடிக்கும்படி செய்து, நமக்குக் கிடைக்கும் பலனை கிடைக்காது போகும்படி மோசம் செய்ய முடியும். நாம் இயேசுவுடன் இணைந்து உலகத்தின் கொள்கைகளுக்கு மரித்தவர்களாகவும், மனிதர்களின் கட்டளைகளாகவும் போதனைகளாகவும் உள்ள (வசனம் 22), மனிதத்துவ முறைமைகளுக்குக் கீழாக இராதிருப்பவர்களாகவும் காத்துக்கொள்ள வேண்டும் (வசனம் 20). இவைகள் "சுயமாக ஏற்படுத்திய மார்க்கம்" ("சுய இஷ்டமான ஆராதனை"; வசனம் 23) என்பதற்கு வழிநடத்துகிற ஞானத்தின் அடிப்படையில் அமைத்துள்ளன.

இயேசு போதித்தவற்றுடன் நாம் நமது நடைமுறைகளை மட்டுப்படுத்திக் கொள்ள வேண்டியுள்ளது. மனிதர்களின் ஞானத்தினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ள போதனைகளை நாம் பின்பற்றக் கூடாது.

*2 தீமோத்தேயு 3:16, 17*

பழைய ஏற்பாடு என்பது, தீமோத்தேயு சிறுவயதில் இருந்தே அறிந்திருந்த

*வேதவசனங்களாக இருந்திருக்க வேண்டும் (2 தீமோத்தேயு 3:15); 2 தீமோத்தேயு 3:16ல் பவுல், "வேதவாக்கியங்களெல்லாம்" என்று குறிப்பிட்டபோது, அவர் பழைய ஏற்பாட்டைக் காட்டிலும் அதிகமானவற்றை அர்த்தப்படுத்தினார். வில்லியம் ஹென்ரிக்சென் என்பவர் பின்வருமாறு விளக்கம் அளித்தார்,*

> *15ம் வசனத்தில் பவுல் ''பரிசுத்த வேத எழுத்துக்கள்'' என்ற சொல்விளக்கத்தைப் பயன்படுத்தினார், ஆனால் 16ம் வசனத்தில் உள்ள "வேதவாக்கியங்களெல்லாம்" என்பது, அவர் பழைய ஏற்பாட்டிற்கும் (வசனம் 15) தெய்வீக ஏவுதல் பெற்ற வேதவசனம் என்று அழைக்கப்பட உரிமையுள்ள* எல்லாவற்றிற்கும் *(வசனம் 16) இடையிலான வித்தியாசத்தைக் கொண்டுவர அவர் விரும்புகிறார் என்ற எளிய காரணத்திற்கு பயன்படுத்தப்பட்டதாக உள்ளது. பிந்திய இந்தச் சொற்றொடர் முந்தியதை விட அதிகமானவற்றை உள்ளடக்கி இருக்கிறது.*[2]

*புதிய ஏற்பாட்டின் எழுத்துக்கள் வேதவசனம் என்று மதிக்கப்பட வேண்டியவையாக உள்ளன. பவுலின் எழுத்துக்களைப் பற்றிப் பேதுருவும்கூட இவ்வாறு எழுதினார் (2 பேதுரு 3:16).*

*தேவ எவுதல் பெற்று, முற்றிலுமாக வெளிப்படுத்தப்பட்டுள்ள வேதவசனமானது, ''உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும்'' அடிப்படையாக அமைந்துள்ளது (2 தீமோத்தேயு 3:16). வேறு எந்த எழுத்துக்களும் இதேவிதமான அதிகாரத்துவத்தையோ அல்லது முழுமைத் தன்மையையோ கொண்டிருப்பதில்லை.*

*இந்த எழுத்துக்களின் மூலமாக, தேவனைப் பின்பற்றுபவர் ''எந்த நற்கிரியையுஞ்செய்யத் தகுதியுள்ளவராக" இருக்கிறார் (2 தீமோத்தேயு 3:17). வேறு எந்தத் தர அளவையும் தேவையில்லை. தேவனுடன் சரியான உறவில் இருப்பதற்குக் கிறிஸ்தவர்கள் செய்ய வேண்டிய ஒவ்வொரு செயலும் வேதவாக்கியங்களில் அடங்கியுள்ளது. வேதாகமப் போதனைக்குப் புறம்பாக தேவனை சேவிக்க நாடுபவர்கள், தேவனைப் பிரியப்படுத்தக் கிறிஸ்தவர்கள் செய்ய வேண்டியவை அடங்கியுள்ள புதிய ஏற்பாட்டின் சத்தியத்தை மறுக்கின்றனர்.*

***தீத்து 1:10-14***

*போதிக்கக் கூடாத விஷயங்களைப் போதித்துக் கொண்டிருந்த வஞ்சகர்களுக்கு எதிராகப் பவுல் எச்சரிக்கை செய்தார் (வசனங்கள் 10, 11). இவர்கள் விசுவாசத்தில் ஆரோக்கியமுள்ளவர்களாக இருக்கும்படியும் (வசனம் 13), உண்மையும், தூய்மையும் கேட்டுக்கு ஏதுவற்றதுமான விஷயங்களை மாத்திரமே போதிக்கும்படிக்குக் கடுமையாகப் புத்திகூறப்பட வேண்டியவர்களாக இருந்தனர்.*

*கட்டுக்கதைகளுக்கும், சத்தியத்தை விட்டுவிலகுகிற மனுஷருடைய கற்பனைகளுக்கும் செவிகொடாமல் இருக்கவேண்டும் (1:13), ஆனால் நாம் நமது தேவனுக்கும் இயேசுவின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட சத்தியத்திற்கும் நமது ஊழியத்தை மட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும் (யோவான் 1:17; 8:31, 32; 14:6).*

*எபிரெயர் 2:10; 12:2*

இயேசுவே, கிறிஸ்தவ விசுவாசத்தின் "எழுத்தாளராக"வும், அவரது சீஷர்கள் பின்பற்ற வேண்டிய போதனையின் ஆதார மூலமாகவும் இருக்கிறார். அவர் கிறிஸ்தவ விசுவாசத்தைத் தொடங்கி வைத்தது மாத்திரமின்றி (எபிரெயர் 2:3), அதை நிறைவு செய்பவராகவும் இருக்கிறார். புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்பட்டுள்ளவகையில், ஒரு நடைமுறை, இயேசுவின் போதனையில் காணப்படாது இருந்தால், அந்த நடைமுறையை இயேசு தொடங்கவில்லை. அவர் எல்லாக் காலத்திலும் உள்ள கிறிஸ்தவர்களுக்கான போதனையை முழுமை யாக வெளிப்படுத்தி இருக்கிறார் (யூதா 3).

*2 யோவான் 9*

யோவான், ''கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல; கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன்'' என்று எழுதினார் (2 யோவான் 9). இந்தக் கூற்றில் உள்ள வினைச் சொற்கள், தொடர் செயலைச் சுட்டிக்காண்பிக்கின்றன. இயேசு போதித்துள்ளவற்றிற்கு அப்பால் செல்லத் தொடருகிறவர்களும் இயேசு போதித்துள்ளவற்றில் நிலைத்திராதவர்களும் தேவனை உடையவர்களாக இருப்பதில்லை. அவரது போதனையில் நிலைத்திருக்கும்படித் தங்களின் நடைமுறைகளைச் சீர்பொருத்தமாக மட்டுப்படுத்திக்கொள்பவர்கள் பிதாவையும் குமாரனையும் கொண்டுள்ளனர்.

*வெளிப்படுத்தின விசேஷம் 22:18, 19*

வேதாகமத்தின் முடிவுக்கூற்று, வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் எழுதப்பட்டு உள்ளவற்றுடன் ஒன்றைக் கூட்டும் அல்லது அதிலிருந்து ஒன்றைக் குறைக்கும் நபரை வன்மையாகக் கண்டனம் பண்ணுகிறது. இது வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்திற்கு மாத்திரமே நடைமுறைப்படுகிறதா? வேதாகமப் புத்தகங்களுடன் எவரொருவரும் ஒன்றையும் கூட்டுவதையோ அல்லது அவற்றிலிருந்து ஒன்றையும் குறைப்பதையோ தேவன் விரும்புவதில்லை என்றால், இக்கூற்று வேதாகமத்தின் பிற புத்தகங்களுக்கும் நடைமுறைப்படாதா? தேவனுடைய வசனம் என்ற வகையில் வெளிப்படுத்தின விசேஷம் என்ற புத்தகத்தைப் பொறுத்தமட்டில் உண்மையாக உள்ள ஒவ்வொரு விஷயமும் தேவனுடைய வெளிப்பாட்டின் எஞ்சிய பகுதிகளுக்கும் உண்மையானதாகவே இருக்க வேண்டும்: நாம் அவரது போதனைகளுடன் ஒன்றையும் கூட்டவோ அல்லது அவற்றிலிருந்து ஒன்றையும் குறைக்கவோ கூடாது.

## முடிவுரை

இயேசு போதித்தவற்றிற்குப் புறம்பே செல்பவர்கள் தேவனைக் கொண்டிருப்பதில்லை, ஆனால் அவரது போதனையில் நிலைத்திருப்பவர்கள் பிதாவையும் குமாரனையும் கொண்டுள்ளனர். இந்தக் கருத்தானது, ஒரு வட்டத்தை வரைவதன் மூலம் விவரிக்கப்பட முடியும். அந்த வட்டத்திற்குள்ளாக, புதிய ஏற்பாட்டில் காணப்படும் இயேசுவின் போதனை ஒவ்வொன்றையும் எழுதிக்கொள்ளுங்கள். (அவர் தேர்ந்து கொள்ளுதலை

ஏற்படுத்தியுள்ள பகுதியில்) அவரது போதனையில் காணப்படாத எந்த நடைமுறையும் வட்டத்திற்கு வெளியே எழுதப்பட வேண்டும். இதற்குக் கர்த்தருடைய இராப்போஜனம் ஒரு உதாரணமாகப் பயன்படுத்தப்பட முடியும். இயேசு தேர்ந்துகொண்டுள்ளதை வட்டத்திற்கு உள்ளே எழுதுங்கள்: "அப்பம்" மற்றும் "திராட்சரசம்" (மத்தேயு 26:26-29). "பாலாடைக் கட்டி," "ஹாம்," மற்றம் "ஆப்பிள் சாறு" ஆகியவற்றை வட்டத்திற்கு வெளியே எழுதிக்கொள்ளுங்கள். வட்டத்திற்கு உள்ளே இருக்கும் ஒவ்வொரு விஷயமும் நடைமுறைப்படுத்தப்படவேண்டும், ஆனால் வட்டத்திற்கு வெளியே உள்ள ஒவ்வொன்றும், இயேசுவின் போதனையில் காணப்படுவதில்லை என்பதால் தவிர்க்கப்பட வேண்டும். ஒரு நபர், வட்டத்திற்கு வெளியே உள்ள எதையாவது நடைமுறைப்படுத்துகிறார் என்றால், அவர் இயேசுவின் போதனைக்கு அப்பால் செல்பவராக இருக்கிறார்.

---

குறிப்புகள்

[1]John L. Girardeau, *Instrumental Music in the Public Worship of the Church* (Havertown, Pa.: New Covenant Publication Society, 1888; reprint, 1983), 3. [2]William Hendriksen, *I-II Timothy,* New Testament Commentary (Grand Rapids, Mich.: Baker Book House, 1974), 300.

## கிறிஸ்தவர்களுக்கான கட்டளைகளை அடையாளம் காணுதல்

இஸ்ரவேல் மக்கள் தேவனுக்குக் கீழ்ப்படிவதற்கு அறிந்து கொள்ளத் தேவையான எல்லா விஷயங்களையும் தேவன் வெளிப்படுத்தியுள்ளதாக அவரே மோசேயின் மூலம் உரைத்தார். அதே போன்ற வகையில், இயேசு தமது போதனையின் முழுமையை அப்போஸ்தலர்கள் பெறுவார்கள் என்று வாக்குத்தத்தம் செய்தார். இது மிகவும் முக்கியமானதாக இருக்கிறது, ஏனெனில் தேவன் தம்மை இயேசுவின் மூலமாக வெளிப்படுத்தினார் (எபிரெயர் 1:1, 2; மேலும் காண்க யோவான் 12:49, 50). பின்பு அவர் [இயேசு] *சகல* சத்தியத்தையும் அப்போஸ்தலர்களுக்குக் கொடுத்தார் என்பதால் முக்கியமானதாக உள்ளது.

மோசேயின் நியாயப்பிரமாணம் இஸ்ரவேல் மக்களுக்கானதாக இருந்தது. கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் புதிய உடன்படிக்கையின்கீழ் இருக்கின்றனர். நியாயப்பிரமாணம் மக்களைக் கிறிஸ்துவினிடத்தில் கொண்டுவர ஒரு உபாத்தியாகப் பயன்பட்டிருந்தாலும் (கலாத்தியர் 3:24, 25), நாம் எவ்வாறு ஆராதிப்பது என்பதைக் கற்றுக்கொள்ளப் பழைய ஏற்பாட்டைக் கண்ணோக்க இயலாது. இரு ஏற்பாடுகளிலும் போதிக்கப்பட்ட நடைமுறைகள் வேறுபட்டிருப்பதால், நியாயப்பிரமாணத்தின் கீழ் ஆராதனையில் பயன்படுத்தப்பட்ட இசைக்கருவிகள் புதிய ஏற்பாட்டு ஆராதனையில் *உள்ளக்கப்பட வில்லை* என்பது வினோதமானதாகக் கண்ணோக்கப்படக் கூடாது. தேவனும் இயேசுவும் என்றைக்கும் மாறாதவர்களாக *இருக்கின்றனர்* (எபிரெயர் 13:8), ஆனால் அவர்கள் இஸ்ரவேல் மக்களிடத்தில் கேட்டுக் கொண்டது, புதிய உடன்படிக்கையின் கீழ் சகல மக்களினத்திலும் உள்ள கிறிஸ்தவர்களிடத்தில் கேட்டுக் கொள்ளப்படுவது போன்று *இருப்பதில்லை.*

*பழைய ஏற்பாட்டில் ஒரு நடைமுறையைப் பற்றிக் குறிப்பிடுதலானது, கிறிஸ்தவர்களால் அந்த நடைமுறை செயல்படுத்தப்பட வேண்டும் என்று சுட்டிக்காண்பிப்பதில்லை. சீர்பொருத்தமாயிருக்க, பழைய ஏற்பாட்டின் ஒரு நடைமுறையைக் கடைப்பிடிக்கும் ஒரு நபர், அதில் எஞ்சியுள்ள மற்ற எல்லாவற்றையும் கடைப்பிடிக்கக் கடன்பட்டுள்ளார். அவற்றில் ஒன்று கட்டுவிக்கும் என்றால் எல்லாம் கட்டுவிப்பவையாகவே உள்ளன. இந்தக் கருத்தைப் பவுல் கலாத்தியர் 5:3ல் ஏற்படுத்தினார்.*

*கிறிஸ்தவ யுகத்தில் தேவனுடைய செய்தியானது அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள் மூலமாக முழுமையாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. நமக்கான அவரது கட்டளைகள் முழுமையாகப் புரிந்துகொள்ளப்பட முடியும் (காண்க எபேசியர் 3:4, 5).*

*வேறு எந்தப் புத்தகத்திலும் தேவனுடைய செய்தி அடங்கி இருப்பதில்லை. வேதாகமம் கவனநிறைவுடன் வாசிக்கப்பட்டு முழுமையாகப் பின்பற்றப்பட வேண்டும், ஏனெனில் இதில், "ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவும்" (2 பேதுரு 1:3) அடங்கியுள்ளது. மார்க்கரீதியான ஒரு செயல், புதிய ஏற்பாட்டில் போதிக்கப்பட்டிருக்கவில்லை என்றால், அது செயல்படுத்தப்படக் கூடாது. புதிய ஏற்பாட்டில் காணப்படாத ஒரு மார்க்கரீதியான செயலை அறிமுகப்படுத்துபவர்கள், அவ்வாறு செய்வதினால், தேவன் நாம் ஆராதிக்க நம்மிடத்தில் தேவன் எதிர்பார்க்கும் எல்லா விஷயத்தையும் அவர் வெளிப்படுத்தி இருக்கவில்லை என்று மறைமுகமாகக் குறிப்பிடுகின்றனர்.*

*தேவனை சேவிக்க நமக்குத் தேவையான எல்லாம் வேதவசனங்களில் அடங்கியுள்ளது. அவைகள் நம்மை தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் ஆக்க முடியும் (2 தீமோத்தேயு 3:16, 17). வெளிப்படுத்தப்பட்டுள்ளவற்றுடன் ஒன்றைக் கூட்டுபவர்கள், நிறைவாக உள்ளவற்றுடன் ஒன்றைக் கூட்டுபவர்களாக உள்ளனர். வேதவசனங்களில் காணப்படாத எந்த நடைமுறையும் இயேசுவினிடத்தில் இருந்து வந்ததல்ல என்பதால் அது பயன்படுத்தப்படக் கூடாது. இயேசு மாத்திரமே ஒரேவழியாக இருப்பதாலும் அவரது முழுமையான வெளிப்படுத்துதல் புதிய ஏற்பாட்டில் காணப்படுவதாலும், நமது ஆராதனையில் நாம் அவர் வெளிப்படுத்தியுள்ளவற்றிற்கும் அப்பால் வேறு எந்த நடைமுறையையும் உள்ளடக்கத் தேவையில்லை, அவ்வாறு நாம் உள்ளடக்கக் கூடாது.*

*ஒரு நடைமுறையானது தெய்வீக அங்கீகாரத்தைக் கொண்டுள்ளதா இல்லையா என்று தீர்மானிக்க, நாம் அதிகாரத்துவத்தின் நான்கு கொள்கைகளை மறுகண்ணோட்டமிட முடியும்: (1) தேவன் கட்டளையிட்டுள்ளவற்றிற்கு நாம் கீழ்ப்படிந்தாக வேண்டும்; (2) தேவன் தடைசெய்துள்ளவற்றை நாம் தவிர்த்தாக வேண்டும்; (3) தேவன் தேர்வு ஏற்படுத்தியுள்ள இடத்தில் நாம் அந்தத் தேர்வு கொண்டு மட்டுப்படுத்தப்படுகிறோம்; (4) தேவன் குறிப்பிட்ட தேர்வு ஏற்படுத்தி யிராத இடத்தில், நாம் மற்றவர்களுக்காகப் பகுத்தறிதல் மற்றும் ஆழ்ந்த சிந்தனை ஆகியவற்றுடன் செயல்படச் சுயாதீனம் கொண்டிருக்கிறோம்.*